# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, மாச்சு மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 15.25 தபாற் செலவு : ரூபா 6.75

## 2003 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு மாச்சு 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ—ஓ. 29/99
4623

## 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 2003 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் இரண்டாம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல்" என்னும் சொல்லிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரை உள்ள சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். அத்துடன், மேற்படி தண்டனைக்கு மேலதிகமாக, எவ்வாள் தொழிலில் அத்தவறு புரியப்பட்டுள்ளதோ அவ்வாளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய நட்டவீட்டுத் தொகையொன்றைச் செலுத்துமாறு தொழில்தருநருக்குக் கட்டளையிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவானது அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

"(3) இரண்டாம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறும் வகையில் ஆள் ஒருவர் இரவில் தொழிலுக்கமர்த்தப்படுமிடத்து, அத்தொழில்தருநரின் அத்துடன் (தொழிலுக்கமர்த்தப்பட்டவர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளின் செயலுக்கு அல்லது தவிர்வுக்கு மீறுகையானது ஏத்திக்கூறப்படுகின்றதோ அத்தொழில்தருநர் அல்லது வேறு எவரேனும் ஆள் தவறொன்றுக்கும் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்காக இருவகையிலொருவகையான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் ஒரு இளம் ஆளின் விடயத்தில் மட்டும் அவ்விளம் ஆள் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்டவராகவிருக்கின்றவிடத்து, மேற்படி தண்டனைக்கு மேலதிகமாக, அத்தவறு எவ்வாள் தொடர்பில் புரியப்பட்டதோ அவ்வாளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகின்ற நட்டயீட்டுத் தொகையொன்று செலுத்தப்படவேண்டுமென தொழில் தருநருக்குக் கட்டளையிடப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தொழில் ஆணையாளர்" என்பது மேலதிகத் தொழில் ஆணையாளரையும், பிரதித் தொழில் ஆணையாளர் ஒருவரையும் மற்றும் உதவித் தொழில் ஆணையாளர் ஒருவரையும் உள்ளடக்கும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தில் 4 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதி வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாம் அல்லது அதற்குப் பின்னரான தவறொன்றின் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாம் அல்லது அதன்பின்னரான தவறொன்றின் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அதன் (2) ஆம் உட்பிரிவில், அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அதன் (3) ஆம் உட்பிரிவில், "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்காக இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன், எப்பிள்ளை தொடர்பில் அத்தவறு புரியப்படுகிறதோ அப்பிள்ளைக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற நட்டயீட்டுத் தொகையொன்றைச் செலுத்துவதற்குக் கட்டளையிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாம் அல்லது அதற்குப் பின்னரான தவறொன்றின் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 8அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

9. பின்வரும் புதிய பிரிவானது, 8 ஆம் பிரிவை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 8அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :–

"கைத்தொழில் பொறுப்பு முயற்சிகளில் இளம் ஆட்களைத் தொழிலுக் கமர்த்துதல் தொடர்பில் தகவலை கொடுத்து தவுதல்.

8அ. (1) ஏதேனும் கைத்தொழில் பொறுப்பு முயற்சியில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் இளம் ஆளின் தொழில்தருநர் மற்றும் அவ்விளம் ஆளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் தேவைப்படுத்தப்பட்டால், அவ்வலுவலர் தேவைப்படுத்துகின்றவாறு, அவ்விளம் ஆளைத் தொழிலுக்கமர்த்துதல் தொடர்பான அத்தகைய தகவலை அவ்வலுவலருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது கைத்தொழில் பொறுப்புமுயற்சியொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள இளம் ஆள் தொடர்பாகப் பொய்யான தகவலை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு வேண்டுமென்று வழங்குகின்ற எவரேனும் தொழில்தருநர், பெற்றோர் அல்லது பாதுகாவலர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, "பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரண்டு

மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்காக இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அதன் (2) ஆம் உட்பிரிவின் அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அதன் (4) ஆம் உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள சொற்களுக்குப் பதிலாக, "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் மேற்கூறப்பட்டவைக்கு மேலதிகமாக அத்தவறு எவ்வாள் தொடர்பில் புரியப்பட்டதோ அவ்வாளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான நட்டவீட்டுத் தொகையொன்று செலுத்தப்படவேண்டுமென கட்டளையிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாம் அல்லது அடுத்துறும் தவறொன்றின் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகையான மறியற்தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு பின்வரும் பிரிவானது அதற்குப் பதிலாக இடப்படுகிறது :—

"பிள்ளைகளைத் தொழிலுக் கமர்த்துதல் மீதான மட்டுப்பாடு.

13 (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கவன்றி பிள்ளை எவரும் தொழிலுக்கமர்த்தப்படலாகாது.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறி பிள்ளையொன்று தொழிலுக்கமர்த்தப்பட்டால், எத்தொழில்தருநரின் அல்லது (தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ள பிள்ளை தவிர்ந்த) வேறு ஆளினது செயலுக்கு அல்லது தவறுகைக்கு மீறுகையானது ஏற்றிக்கூறப்படற்பாலதோ அத்தொழில்தருநர் அல்லது வேறு ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்காக இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். அத்துடன் அத்தவறு எப்பிள்ளை தொடர்பில் புரியப்பட்டதோ அப்பிள்ளைக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகின்ற நட்டவீட்டுத் தொகையொன்று செலுத்தப்படவேண்டுமெனக் கட்டளையிடப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது, இடப்படுகின்றது :—

"பெற்றோரால் அல்லது பாதுகாவலர்களால் பிள்ளைகள் தொழிலுக் கமர்த்தப்படுதல்.

14. (1) பிள்ளை ஒன்று –

(அ) வழமையான பாடசாலை நேரங்கள் தொடங்கு முன்னர் அல்லது பாடசாலை நேரங்கள் முடிவடைந்ததன் பின்னர், அதே குடும்ப உறுப்பினர்களால் கொண்டுநடாத்தப்படுகின்ற இலகுவான கமத்தொழில், தோட்டக்கலை, வேலையில் அல்லது அதையொத்த வேலையில் அவரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரினால் அன்றி ;

(ஆ) ஒரு பகிரங்க அதிகாரசபையால் மேற்பார்வை செய்யப்படுகின்றதும் ஏதேனும் வியாபாரம் அல்லது செய்தொழில் நோக்கத்துக்காக தொழில்நுட்பக்கல்வி அல்லது வேறு பயிற்சியை வழங்குகின்றதுமான ஏதேனும் பாடசாலையில் அல்லது வேறு நிறுவகத்தில் அன்றி

தொழிலுக்கமர்த்தப்படலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏதேனும் ஏற்பாடுகளை மீறி பிள்ளையொன்று தொழிலுக்கமர்த்தப்படின் எத்தொழில்தருநரின் அல்லது (தொழிலுக்கமர்த்தப்பட்ட பிள்ளை தவிர்ந்த) எவ் ஆளினது செயலுக்கு அல்லது தவறுகைக்கு மீறுகையானது ஏற்றிக் கூறப்படுகின்றதோ அத்தொழில்தருநர் அல்லது ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவான் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத

காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் அத்தவறு எப்பிள்ளை தொடர்பில் புரியப்பட்டதோ அப்பிள்ளைக்கு, நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகின்ற நட்டவீட்டுத் தொகையொன்று செலுத்தப்படவேண்டுமெனக் கட்டளையிடப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது, "இச்சட்டத்தின்" என்பதிலிருந்து "அதிகாரமளிக்கப்பட்டதாக இருப்பினுங்கூட" என்னும் சொற்கள் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "இச்சட்டத்தின் இப்பாகத்தினால் அதிகாரமளிக்கப்படலாம் என்பது, எவ்வாறிருப்பினும்கூட" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(அ) அதன் (1) ஆம் உட்பிரிவில் "பிள்ளை எவரினதும் தொழில்தருநரும் அப்பிள்ளையின் பெற்றோரும் அல்லது பாதுகாவலரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பிள்ளை எவரினதும் தொழில்தருநரும், அப்பிள்ளையின் பெற்றோரும், காப்பாளரும் அல்லது பாதுகாவலரும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அதன் (2) ஆம் உட்பிரிவின் —

(i) "தொழில்தருநர், பெற்றோர் அல்லது பாதுகாவலர்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "தொழில்தருநர், பெற்றோர், காப்பாளர் அல்லது பாதுகாவலர்" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ii) "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்னும் சொற்களில் இருந்து அவ்வுட்பிரிவின் இறுதி வரையுள்ள எல்லாச் சொற்களுக்குப் பதிலாக,

"குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆ உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்னும் சொற்களில் இருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்காக இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். அத்துடன் எப்பிள்ளை தொடர்பில் தவறானது புரியப்பட்டிருந்ததோ அப்பிள்ளைக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகின்ற நட்டவீட்டுத் தொகையொன்று செலுத்தப்படவேண்டுமென கட்டளையிடப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்னும் சொற்களில் இருந்து, அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் எப்பிள்ளை தொடர்பில் தவறுபுரியப்பட்டிருக்கின்றதோ அப்பிள்ளைக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகின்ற நட்டவீட்டுத் தொகையொன்று செலுத்தப்படவேண்டுமெனக் கட்டளையிடப்படுதலும் வேண்டும்". என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

"பதினாறு வயதுக்குக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினெட்டு வயதுக்குக்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(i) "பதினாறு வயதுக்குக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினெட்டு வயதுக்குக்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ii) "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்னும் சொற்களில் இருந்து அவ்வுட்பிரிவின் இறுதி வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். அத்துடன் எந்த ஆள் தொடர்பில் தவறுபுரியப்பட்டிருக்கின்றதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகின்ற நட்டவீட்டுத் தொகையொன்று செலுத்தப்படவேண்டுமெனக் கட்டளையிடப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(இ) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில் "பதினாறு வயதுக்குக்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பதினெட்டு வயதுக்குக்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும் :—

"(1) பதினாறு வயதையடையாத பிள்ளை அல்லது இளம் ஆள் எவரும் அபாயகரமான தன்மையிலான அரங்காட்டல்களில் பங்கு பற்றுவதற்குப் பயிற்றப்படுதலாகாது ;

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "பதினாறு வயதிற்குக் கீழ்ப்பட்டவருமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்டவருமான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்னும் சொற்களில் இருந்து அவ்வுட்பிரிவின் இறுதி வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டிருக்கின்றதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகின்ற நட்டஈட்டுத் தொகையொன்று செலுத்தப்படவேண்டுமென்று கட்டளையிடப்படுதலும் வேண்டும்.";

அத்துடன்

(ஈ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "பதினான்கு வயதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினாறு வயதை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் அத்துடன் "பதினாறு வயதுக்குக்"

என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினெட்டு வயதுக்குக்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்னும் சொற்களில் இருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் எந்த ஆள் தொடர்பில் தவறுபுரியப்பட்டிருக்கின்றதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற நட்டஈட்டுத் தொகையொன்று செலுத்தப்படவேண்டுமெனக் கட்டளையிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "தொழில்தருநரும் பெற்றோரும் அல்லது பாதுகாவலரும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "தொழில்தருநரும், பெற்றோரும், காப்பாளரும் அல்லது பாதுகாவலரும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) தொழில்தருநர், பெற்றோர் அல்லது பாதுகாவலர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொழில்தருநர், பெற்றோர், காப்பாளர் அல்லது பாதுகாவலர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம்

ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது பன்னிரெண்டு மாத காலப் பகுதியை விஞ்சாத இருவகையிலொருவகையிலான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், அத்துடன் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாக, "உட்பிரவேசிப்பதற்கும் தேடுகையிடுதலுக்கான தத்துவங்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "உட்பிரவேசிக்கலாமென்பதுடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உட்பிரவேசித்துத் தேடுகையிடலாமென்பதுடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(இ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான இருவகையி

லொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அத்துடன் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்" என்னும் சொற்களில் இருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையுள்ள எல்லா சொற்களுக்குப் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் அத்துடன் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் :—

"(1அ) முற்போந்த (1) ஆம் உட்பிரிவின்கீழ் அரசாங்க மருத்துவ அலுவலர் எவரேனும் ஆளை பரிசோதனை செய்யுமிடத்து அத்தகைய இளம் ஆள் அல்லது பிள்ளை ஒருவரின் வயது தொடர்பாக ஒரு சான்றிதழை வழங்குதல் அத்தகைய அரசாங்க மருத்துவ அலுவலரின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சான்றிதழ் சான்றாக ஏற்கத்தக்கதாதல் வேண்டுமென்பதுடன், அதனில் இயம்பப்பட்ட நிகழ்வுகளுக்கு முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்";

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற தொழில்தருநர் ஒவ்வொருவரும் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை

விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றிற்கு அல்லது பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்ற வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது தொழில் ஆணையாளர், மேலதிக தொழில் ஆணையாளர், எவரேனும் பிரதித் தொழில் ஆணையாளர், எவரேனும் உதவி ஆணையாளர் எனப் பொருள்படுமென்பதுடன், தொழில் திணைக்களத்துடன் இணைந்துள்ள எவரேனும் ஒரு மருத்துவ அலுவலர், பிரதான தொழிற்சாலை பரிசோதனைப் பொறியியலாளர், தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர், எவரேனும் புள்ளி விபரவியல் அலுவலர், எவரேனும் தொழில் அலுவலர் அல்லது எவரேனும் புள்ள விபரவியலரையும் உள்ளடக்கும்"

(ஆ) "பிள்ளை" என்ற வரைவிலக்கணத்தின் உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"காப்பாளர்" என்பது பிள்ளையின் கட்டுக்காப்பைக் கொண்டிருக்கின்றவரும், பிள்ளையின் சார்பில், அத்தகைய பிள்ளையின் அலுவல்களைக் கொண்டு நடாத்துகின்றவருமான நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருளாகும்;

(இ) "தெரு வியாபாரம்" என்ற வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன்மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**28.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.